

இராமநாதபுரம் மாவட்டம் கமுதி ஊராட்சி ஒன்றியம் கொல்லங்குளம் கிராமத்தில் முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து புதிதாக கட்டப்பட்ட நியாய விலைக்கடை கட்டிடத்தை முன்னாள் அமைச்சரும் சட்டமன்ற உறுப்பினருமான ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் திறந்து வைத்தார். உடன் ஒன்றிய செயலாளர்கள் வி.வாசுதேவன்,பூபதிமணி , சண்முகநாதன் , கோவிந்தன் நகர செயலாளர் பாலமுருகன் மாவட்ட பிரதிநிதி காசிலிங்கம் உட்பட கட்சி பிரதிநிதிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் அருள்மிகு ஸ்ரீ பழனியாண்டவர் மகளிர் கல்லூரிகட்டிடம் கட்டும் பணியினை அர. சக்கரபாணி எம்.எல்.ஏ. நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

நாகர்கோவில் மாநகர வடக்கு பகுதி

# 7 வது வட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் ஆலோசனை வழங்கினார்!

குமரி, ஜூலை 31-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகர வடக்கு பகுதி, 7 வது வட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டமானது 7வது வட்ட கழக செயலாளர் அ.ஆத்தியப்பன் தலைமையில், நாகர்கோவில் மாநகர வடக்கு பகுதி செயலாளர் இ.ஜவகர் முன்னிலையில் 29.07.2026, புதன்கிழமை அன்று மாலை 6.30 மணியளவில் நாகர்கோவில், வாத்தியார்விளை, தெலுங்கு செட்டி தெரு பகுதியில் வைத்து நடைபெற்றது.



கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகள் தொடர்பாக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கினார்.

ஆலோசனைக் கூட்டத்தில் நாகர்கோவில் மாநகர தி.மு.க அவைத் தலைவர் ப.பன்னீர்செல்வம், மாமன்ற உறுப்பினர் E.மேரி ஜெனட் விஜிலா, முன்னாள் மாமன்ற உறுப்பினர் P.ஜெயசிங், கழக நிர்வாகிகள் சாய்நாத், கே.அஜித், தினேஷ் குமார், ஜி.ஆனந்த் உட்பட பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA2, BLC மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டது.

வருகின்ற உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெறும் வகையில் அதற்கான களப் பணிகளை இன்றே தொடங்கி செயல்படுத்துவது என தீர்மானிக்கப் பட்டது.

கழக பணியினை தொய்வின்றி நடத்த கழக தலைவர் கட்டளையை ஏற்று நடக்கவும், மாவட்ட கழகம் அறிவிக்கும் பணிகளை செவ்வனே நிறைவேற்றி கழகம் மீண்டும் ஆட்சி அமைக்க அயராது பாடுபட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

கடந்த தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் கழக வேட்பாளருக்காக உழைத்த கழக நிர்வாகிகளுக்கும், மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியினருக்கும் மற்றும் வாக்களித்த அனைத்து வாக்காளப் பெருமக்களுக்கும் மாவட்ட தி.மு.கழகம் மற்றும் நாகர்கோவில் மாநகர வடக்கு பகுதி கழகம் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

திருப்பாச்சேத்தி. அருகே அதிகாலையில்

# பிரபல ரவுடி வீடு புகுந்து வெட்டிக் கொலை!

## கிராம மக்கள் அதிர்ச்சி

சிவகங்கை, ஜூலை 31 -

சிவகங்கை மாவட்டம் திருப்பாச்சேத்தி அருகே உள்ள மாத்தூர் கிராமத்தைச் சேர்ந்தவர் ஊர்க்காவலன் வயது31., இவர் பிரபல ரவுடி ஆவார் .இவர் மீது மதுரை சிவகங்கை உள்பட பல்வேறு மாவட்டங்களில் 30க்கும் மேற்பட்ட கொலை,கொள்ளை உட்பட பல்வேறு சம்பவங்களில் தொடர்புடைய வழக்குகள் நிலுவையில் உள்ளது.

இவர் சகோதரர் பிரசாந்த் கடந்த 2007 ஆம் ஆண்டு கொலை செய்யப் பட்டார். இது தொடர்பாக 2021 இல் பழிவாங்கும் வகையில் இருவரை வெட்டி கொலை செய்த வழக்கில் ஊர்க்காவலன் சம்பந்தப்பட்டுள்ளதாக போலிஸ் தரப்பில் கூறப்படுகிறது. இந்நிலையில் 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் மானாமதுரை இன்ஸ்பெக்டர் குமாரவேல் பாண்டியன் தலைமையில் தனிப்படை போலிசார் தலைமறைவாக உள்ள ஊர்க் காவலனை பிடிப்பதற்காக மாத்தூர் சென்றபோது போலிசாரை அரிவாளால் தாக்கி விட்டு தப்ப முயற்சி செய்தபோது ஊர்காவலனை போலிசார் சுட்டதில் காலில் காயம் ஏற்பட்டது. இது தொடர்பாக கைது செய்யப்பட்டு சிறையிலிருந்த ஊர்க்காவலன் தற்பொழுது ஜாமினில் வந்ததாக கூறப்படுகிறது.

இந்நிலையில் நேற்று முன்தினம்அதிகாலை வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த ஊர்க்காவலனை வீட்டிற்குள் புகுந்த ஐந்து பேர் கொண்ட கும்பல் அரி வாளால் வெட்டி படுகொலை செய்ததாக கூறப்படுகிறது. கொலை செய்துவிட்டு அவர்கள் தப்பி ஓடி விட்டார்கள்.

இதுதொடர்பாக திருப்பாசேத்தி போலிசாருக்கு கிடைத்த தகவல் பேரில் ஊர்க்காவலன் உடலை கைப்பற்றி சிவகங்கை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு பிரேதபரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். திருப்பாச்சேத்தி போலீசார் இது குறித்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

திருப்பாச்சேத்தி திருப்புவனம் மற்றும் பல்வேறு பகுதிகளில் போலீசார் தீவிர பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளார்கள். இச்சம்பவம் அப்பகுதியில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



சிவகங்கை நகராட்சி சார்பில் ரூபாய் 5லட்சம செலவில் அமைக்கப்பட்டுள்ள சி.சி. டி.வி கேமராவினை சிவகங்கை நகர் மன்ற தலைவர் சி.எம்.துரை. ஆனந்த் துவக்கி வைத்தார். உடன் நகராட்சி ஆணையர் அசோக் குமார், கவுன்சிலர் வீனஸ் ராமநாதன், காவல் சார் பு ஆய்வாளர் சவுரிமுத்து, பொறியாளர் மீராஅலி, ஒப்பந்ததாரர்தினேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.




அய்யன் திருவள்ளுவர் இலக்கிய மன்றம் சார்பில் சங்கத் தமிழ் வளர்த்த "கவிமணி தேசிக வினாயகம் அவர்கள் " நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்கள் ஆகிய தமிழறிஞர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மதுரை மணியம்மை மழலையர் பள்ளியில் மன்றத் தலைவர் என். எம். மாரி அவர்களின் தலைமையில்மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. புரட்சிப் பாவலர் மன்றத் தலைவர் "பெரியார்நெறியாளர் " பி. வரதராசன் புகழுரை ஆற்றினார். நிகழ்வில் இலக்கிய மன்றத்தின் கே.வி.இராமகிருட்டிணன், க.வெ. நெடுஞ்சேரலாதன், லெ. முருகேசன், ப. பாண்டித்துரை, இல. வெள்ளைச்சாமி, கே. கிருஷ்ணசாமி, குறும்பா பாவலர் இரா. இரவி, மணியம்மை மழலையர் பள்ளி தாளாளர் திருமதி. இரஜினி அமுது கா.ரா. முருகேசன், திராவிட இயக்க கருப்பையா (எ) கருப்பு, முத்திருளன் பலசரக்கு குமார், வை. இராமச்சந்திரன், இராஜ்குமார், குடந்தை இரகுநாதன் மற்றும் பலர் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

த.வெ.க. ஆட்சியில் தேனி மாவட்டம் – ஆண்டிப்பட்டியில் அரசுக்கு சொந்தமான

# நிலங்கள் குறைந்த வாடகைக்கு விடப்பட்டுள்ளதால் அரசுக்கு பல லட்சம் இழப்பு!

தேனி, ஜூலை 31 -

தேனி மாவட்டம்: ஆண்டிபட்டி அருகே உள்ள சக்கம்பட்டி பகுதியில், கைத்தறி நெசவாளர்களுக்குச் சொந்தமான த.வெ.க. ஆட்சியில் பல ஏக்கர் காலியிடங்கள் மிகக் குறைந்த வாடகைக்கு தனியார் அமைப்புகளுக்கும் தனிநபர்களுக்கும்விடப்பட்டுள்ளதாகச் சமூக ஆர்வலர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இது தொடர்பாகச் சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ள புகாரில் கூறியிருப்பதாவது:

**பாரம்பரிய தொழிற்கூடம்:** சக்கம்பட்டி பகுதி பாரம்பரிய கைத்தறி நெசவுத் தொழிலுக்குப் பெயர் பெற்ற இடமாகும். நெசவாளர்களின் தொழில் வளர்ச்சி மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் நலனுக்காகப் ஒதுக்கப்பட்ட/சொந்தமான காலியிடங்கள் பல உள்ளன.

**குறைந்த வாடகை குற்றச்சாட்டு:** இந்த நிலங்களை நெசவாளர்களின் வாழ்வாதாரத்தைப் பெருக்கும் திட்டங்களுக்குப் பயன்படுத்தாமல், முறையான வழிகாட்டுதல்களைப் பின்பற்றாமல் மிகக் குறைந்த மாத வாடகைக்கு விடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

**வருவாய் இழப்பு:** இதன் மூலம் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், அரசுக்கும் பல லட்சம் ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதுடன், நெசவாளர்களின் அடிப்படைத் தேவைகளான நூல் சேமிப்புக் கிடங்கு, உலர்த்தும் கூடம் போன்ற கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த முடியாமல் முடங்கியுள்ளது.

நெசவாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, இந்த நில குத்தகை/வாடகை ஒப்பந்தங்கள் குறித்து மாவட்ட நிர்வாகம் உடனடியாகத் தலையிட்டு உரிய ஆய்வு செய்ய வேண்டும் என்றும், தவறு நடந்துள்ள பட்சத்தில் அந்த ஒப்பந்தங்களை ரத்து செய்து நிலங்களை மீட்க வேண்டும் என்றும் அப்பகுதி மக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மூனு மாசக வேதனை!



நீதிமன்ற நியமனங்களில்
ஊழல்

ஆலயச்
சொத்துகள்
சூறையாடல் என

மாற்றத்தை
மங்களகரமாய்த்
தொடங்கிய
கோட்டுமாடல்
அரசின்
நிர்வாகப்புரட்சி..

அமைச்சர்களின்
அன்றாட

அமெச்சூர்தனங்கள்...

அவ்வப்போது
முகம் மட்டுமே
காட்டிச்செல்லும்
கால்ஷீட் முதலமைச்சரது
கடமை தவறல்..

அரசுவிழாக்களில்
தலைகுனியும் தமிழ்த்தாய்
வாழ்த்து..

பட்டியலிட்டு
பழிவாங்க மட்டுமே
பயன்படுத்தப்படும்
காவல்துறை...

அரசை
விமர்சிப்பவர்களை
ஒடுக்குவதற்குப்
புனையப்படும்
வழக்குகள்..

வழக்கத்தில்
இருக்கும்
திட்டங்களின்மீது ஒட்டப்படும்
பெயர் மாற்ற
"ஸ்டிக்கர்கள்"..

சட்டம் ஒழுங்குச்
சீரழிவுகள்..

சட்டமன்ற
மரபுகளைச்
சாகடித்த
"சைகை"த்
தனங்கள்..

லாக்கப்
மரணங்கள்

மின் வெட்டோடு
கூடிய
மின்கட்டண
உயர்வுகள்..

மேட்டூர்அணைக்கு
பூட்டுப்போட்டு
படுகைப் பகுதியைப்
பாலைவனமாக்கும்
பாதகங்கள்..

மாற்றுக் கட்சி
எம்.எல்.ஏ.க்களை
விலைபேசித்
தூக்கும்
சனிக்கிழமைச்
சந்தையின் ராஜினாமாக்
காட்சிகள்..

அதை முதல்வரே
முன்னின்று
செய்வதாகச்
சொல்லும்
"வைகோ" சாட்சிகள்..

நீட்டுக்கு எதிரான
போராட்டத்தை
மெரினாவில்
படராமல்
ஒடுக்கிய
கடமை உணர்ச்சி..

அதற்காக
கொள்கைஎதிரி
பா.ஜ.க.விடம்
கொப்பளித்த
மகிழ்ச்சி..

"ஆஹா பேஷ்
பேஷ்"எனும்
ஆலவட்ட
ஷொட்டுக்கள்

அடுக்கடுக்கான
நீதிமன்றக்
குட்டுக்கள்..

ஆக
மொத்தத்தில்

ரீல்ஸ்களோடும்
மீம்ஸ்களோடும்

ஜனநாயகத்தை
மதிக்காத
குஜிலிமஸ்து
கூட்டம்

"கடைசிக்காட்சி"
என்று
ஓடாத
ஜனநாயகன்
ஓடும்
தியேட்டர்களில் ஒக்காந்து
அழுதுவழிய..

இந்த ஆட்சியின்
கடைசி நாள்
காட்சி
எப்போது
வரும் என

அறியாது
செய்த
அரசியல்
பிழைக்காக

ஆங்காங்கே
மக்கள்
ஆவேசத்தில்
எரிமலையாய்க்
குமுறி எரிய ..

நம்ம..
பட்டிமன்ற
மந்திரி
பாணியில்
சொன்னால்

"மூச்சுமுட்ட
பேச்சு
மூனுமாசம்
போச்சு" என
விரல் விட்டு
எண்ணுகிறது

வேதனையில்
தமிழ்நாடு...

என்னநாஞ்
சொல்றது



**மருது அழகுராஜ்**
*கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்*